மாலைவேளைகளில் மீண்டும் எருமைப்பால் வழங்குவது மேற்கொள்ளப்பட்டது. காலை வேளையிலேயே எருமைப்பால் அதிகமாகத் தேவைப்படுவதால் நவம்பர் 16 முதல் காலைவேளையில் எருமைப் பாலும் மாலைவேளையில் தரம் உயர்த்தப்பட்ட பாலும் வழங்கப் பட்டு வருகிறது.

*181 வினு—திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் பால் பண்ணையில் 1968-69-ம் ஆண்டில் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு வெளிநாடுகளில் இருந்து உயர்ந் தரகப் பசுக்கள், எருமைகள் வாங்கப்பட்டனவா ?

(இ) அதற்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) ரூ. 82,008.20.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தலைவர் அவர்களே, எருமைப் பால் சென்னை நகருக்கு போதுமான அளவில், தேவைக்குத்தக்கபடி சப்ளை செய்ய முடியாததால், மக்கள் பால் கிடைக்காமல் கஷ்டப்படு கிருர்கள். ஆகவே, இந்தக் குறையை நீக்க, உடனடியாக வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பால் குளிர் காலங்களில் அதிகமாகக் கிடைக்கும்; கோடைக்காலங்களில் குறைவாகத்தான் கறக்கும். குளிர் காலங்களில் எருமைப்பால் கொடுக்கிறோம். ஆனுல் கோடை காலங்களில் போதிய அளவு கிடைக்காததால், பசும்பாலையும், சில வேளைகளில் அதுவும் அதிகமாகக் கிடைக்கா விட்டால், சிங்கிள் டோன்ட், டபிள் டோன்ட் என்று பாலை தரப் படுத்தி, பவுடரைக் கலந்து வினியோகம் செய்கிறோம்.

திரு. கரு. சீமைச்சாமி : அமைச்சரவர்கள் 82,000 ரூபாய் செல வில் வாங்கப்பட்டதாகக் கூறினுர்கள். எத்தனை மாடுகள் வாங்கப் பட்டன ? பால் பண்ணையில் 2,000 மாடுகள் இருந்து, பால் கறந்து கொடுத்தவர்களுக்கு சரியான விலை கொடுக்காததால் பால் பண்ணை யிலிருந்து வெளியேறிவிட்டார்கள் என்று கூறப்படுவது உண் மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மொத்தம் வெளி நாட்டி லிருந்து வாங்கப்பட்ட பசுக்கள் 16, காளைகள் 5. அங்கே இருந்தவர் கள் சரியான விலை கொடுக்காததால் வெளியேறிவிட்டார்கள் என் பதை ஒத்துக்கொள்ள முடியாது. அங்கே மாடுகளை வைத்துக் கொண்டு, பால் பண்ணைக்கு மாட்டுக்கு ஒரு லிட்டர், இரண்டு லிட் டர் வீதம் கொடுத்துவிட்டு, மீதம் உள்ள பாலை வெளியிலே விற்க ஆரம்பித்தார்கள். எவ்வளவு பால் கறக்கிறுர்களோ அவ்வளவு பாலையும் பண்ணைக்குக் கொடுக்க வேண்டும் என்கிற உத்தரவைப் போட்ட பிறகு அவர்களாகவே வெளியேறிவிட்டார்கள்.

1970 மார்ச் 3]

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் வெளியிடத்திலிருந்து வரும் பால் சப்ளை நின்றுவிட்டது என்று சொன்னார்கள். திருப்பூரிலிருந்து ஒரு ஆயிரம் லிட்டர் பால் கொடுத்துவந்ததை, அதிகாரிகள் வேண்டாம் என்று சொல்லிவிட்டதால்தான் நிறுத்தியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் அமைச்சரவர்கள் பால் வாங்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கோடை காலங்களில் எவ்வளவு பால் கொடுக்கிறார்களோ, அதற்கு மேல் ஒன்றரைப் பங்கு குளிர் காலங்களில் வாங்கத்தயார். கோடை காலங்களில் பால் குறைவாக இருப்பதால் அப்பொழுது கொடுக்காமல், குளிர் காலங்களில் பால் அதிகம் கறக்கும்போதுமட்டும் கொடுப்பது என்றால், அப்படி எல்லாப் பாலையும் மாதவரத்தில் வாங்கினால் நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, யார் கோடை காலங்களில் 100 லிட்டர் கொடுப்பார்களோ அவர்களிடமிருந்து குளிர் காலங்களில் 150 லிட்டர் பால் எடுப்போம் என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். எந்தக் கூட்டுறவு சங்கத்திலிருந்தும் பால் வேண்டாம் என்று சொல்வதில்லை.

திரு. கே. விநாயகம் : சார், அரசாங்கத்தின் நோக்கம், பொது மக்கள் நல்ல பாலைக் குடிக்கவேண்டும் என்பதுதான். நல்ல பால் வேண்டும் என்றுதான் மாதவரம் பண்ணை பாலை வாங்குகிறோம் இப்பொழுது மில்க் பவுடரை கலந்து, டோனிங் செய்து மக்களுக்குத் தருவதாகச் சொல்கிறார்கள். அப்படி மில்க் பவுடர் கலந்தால், அதன் தரம் குறையாதா ? அது ஆரோக்கியத்திற்கு நல்லதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, கறந்த பாலில்தான் உலகத் திட்டத்தின்கீழ் பால் பவுடரை சிங்கிள் டோன்ட், டபிள் டோன்ட் என்று தரம் உயர்த்தப்பட்டு பால் கொடுக்கப்படுகிறது. ஆரோக்கியத்திற்கு கேடு எதுவும் இல்லை. ஆறு சதவிகித சத்து உணவை மூன்று சதவிகிதமாகக் குறைக்கிறோம். மற்ற இடங்களில் நடப்பதைத்தான் நாமும் செய்கிறோம். தனியாக எதுவும் இல்லை.

தவளைகள் ஏற்றுமதி

*182 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தவளைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, நம் அண்டை மாநிலமாகிய கேரளத்தில், தமிழகத்தில் தஞ்சை, திருச்சி பகுதிகளில் உள்ள தவளைகளை, நேரா எப் சி. ஐ. மூலமாக விலைக்கு